கொரோனோ வைரஸ் தொற்று
தடுப்பு நடவடிக்கை - மிக அவசரம் 157

எண்.8282/இசநி/கோ.1/2020
புதுச்சேரி அரசு
இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு துறை
மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம் (3வது மாடி)
பேட்டையான் சத்திரம், புதுச்சேரி - 605 009

---------

புதுச்சேரி நாள்:11.04.2020

# சுற்றறிக்கை

பொருள்: இசநி– கொரோனோ வைரஸ் தொற்று – சமூக மற்றும் சமய வழிபாடு, போதனைகூட்டம், திருவிழாக்கள், வழிபாட்டு தலங்களில் ஒன்று கூடுதல் போன்றவைகள் தவிர்த்தல் சம்மந்தமாக அறிவுறுத்தல் - தொடர்பாக.

பார்வை: 1. 10.04.2020 தேதியிட்ட நடுவண் அரசின் உள்துறை செயலர், உள்துறை அமைச்சகம் அவர்களின் கடித எண்.40-3/2020-DM-I(A).

2. 27.03.2020-ஆம் தேதியிட்ட இத்துறையின் இதே எண்ணிட்ட சுற்றறிக்கை.

****

மேலே பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கை மற்றும் கடிதத்தின்பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்ற அனைத்து சமய பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு தற்போது ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள நிலையில் பார்வை 1-ல் கண்ட நடுவண் அரசின் அறிவுறுத்தலின்படி கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை தடுக்கும் நடவடிக்கையாக எவ்வித சமூக மற்றும் சமய வழிபாடு, போதனைகூட்டம், திருவிழாக்கள், வழிபாட்டு தலங்களில் ஒன்று கூடுதல் போன்றவைகள் தவிர்க்கப்படவேண்டும்.

3. எனவே மேற்கூறிய மாவட்ட ஆட்சியர் மற்றும் நடுவண் அரசின் வழிகாட்டுதல் மற்றும் ஆணைக்கிணங்க கொரோனோ தொற்று தடுப்பு நடவடிக்கையாக சமய நிறுவனங்கள் மற்றும் அனைத்து வழிபாட்டு தலங்களில் மேற்குறிப்பட்டவாறு **திருவிழாக்கள், பொதுமக்கள் தரிசனம் உள்ளிட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் மறு உத்தரவு வரும்வரை ரத்து செய்யப்பட வேண்டும் என்று இதன்மூலம் பணிக்கப்படுகிறது.**

...2/-

Scanned with CamScanner

4. மேற்கூறிய ஆணை மற்றும் ஊரடங்கு உத்தரவை மீறுவோர்மீது பேரிடர் மேலாண்மைச்சட்டம், 2005 மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் உரிய பிரவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

/ஆணைப்படி/

(ஞா. சச்சிதானந்தம்)
ஆணையர்
இந்து சமய நிறுவனங்கள்

**பெறுநர்:**

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சி பரப்பில் அமைந்துள்ள அனைத்து சமய நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டு தலங்கள்.

நகல் பெறுநர்:

1. மாவட்ட ஆட்சியர், புதுச்சேரி/காரைக்கால்.
2. இயக்குநர் சுகாதாரத்துறை, புதுச்சேரி.
3. **துணை** மாவட்ட ஆட்சியர்(வருவாய்) (தெற்கு/வடக்கு) புதுச்சேரி/வில்லியனூர் /காரைக்கால் /மாஹே/ஏனாம்.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. செயலர்(இசநி), தலைமைச்செயலகம், புதுச்சேரி.
2. செயலர்(வக்பு வாரியம்), தலைமைச்செயலகம், புதுச்சேரி.
3. செயலர்(சிறுபான்மையினர் விவகாரம்), தலைமைச்செயலகம், புதுச்சேரி.
4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச்செயலர், சட்டப்பேரவை வளாகம், புதுச்சேரி.
5. மாண்புமிகு அமைச்சர்(வக்பு) அவர்களின் தனிச்செயலர், சட்டப்பேரவை வளாகம், புதுச்சேரி.

*****

Scanned with CamScanner